## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை – 27.11.2015

தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் பெய்த வடகிழக்குப் பருவமழையின் காரணமாக 18.11.2015 அன்று சென்னை, அமைந்தகரை வட்டம், அண்ணாநகர் பகுதியைச் சேர்ந்த திரு பலராமன் என்பவரின் மகள் பட்டம்மாள்;

19.11.2015 அன்று சென்னை, மாம்பலம் வட்டம், மேற்கு ஜாபர்கான் பேட்டையைச் சேர்ந்த திரு முத்துராமன் என்பவரின் மகன் திருமுருகன் என்கிற லோகேஷ்;

22.11.2015 அன்று காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் வட்டம், தையூர் கிராமத்தைச் சேர்ந்த திரு ரமேஷ் என்பவரின் மகன் அரிகிருஷ்ணன்;

23.11.2015 அன்று சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், அரசிராமணி கிராமத்தைச் சேர்ந்த திரு ராமசாமி என்பவரின் மகன் பெருமாள்;

24.11.2015 அன்று காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் ‘‘அ’’ கிராமத்தைச் சேர்ந்த திரு மாயாண்டி என்பவரின் மகன் சேகர்;

வேலூர் மாவட்டம், ஆற்காடு வட்டம், பாலி கிராமத்தைச் சேர்ந்த திரு கணபதி என்பவரின் மகன் சிதம்பரம்;

–– ஆகியோர் வெள்ளப் பெருக்கின் காரணமாக நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

24.11.2015 அன்று காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், நெய்குப்பி கிராமத்தைச் சேர்ந்த திரு ஏழுமலை என்பவரின் மகன் சிவக்குமார்

கன மழையின் காரணமாக வீட்டின் சுவர் இடிந்து விழுந்ததில் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

25.11.2015 அன்று காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம், கிளாய் கிராமத்தைச் சேர்ந்த திரு. வினோத் என்பவரின் குழந்தை சஞ்சனா கால்வாயில் விழுந்ததில் நீரில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்தாள் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

தமிழ்நாட்டில் சமீபத்தில் பெய்த கன மழையின் காரணமாக பல்வேறு நிகழ்வுகளில் மேற்கண்ட தேதிகளில் உயிரிழந்த இந்த **8** நபர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயர சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா நான்கு லட்சம் ரூபாய் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**